## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - விடுதிகள் திரு.கு.கருப்பையா, காவலர், அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் என்பவர் பணியிடை காலமானதால் அவரது மகன் - திரு. க.ஆனந்தகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் நிலையில் 13.02.2020 பணி நியமனம் வழங்கப்பட்டது - அன்னாரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியேற்ற நாளான 13.02.2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (ப) எண்.08

நாள்: 13. 01. 2023
சுபகிருது ஆண்டு
மார்கழி 29 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.இ6/40891/2003, நாள்.30.11.2022

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட, ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம், அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் காவலராகப் பணிபுரிந்தபோது பணியிடையே 15.05.2002 அன்று காலமான திரு.கு.கருப்பைய்யா என்பவரது மகன்

All Heads



திரு. க.ஆனந்தகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, 13.02.2020 முற்பகல் முதல் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துரு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, உரிய ஆவணங்களுடன் அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், திரு. க.ஆனந்தகுமார் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியேற்ற நாளான 13.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா.எண்.18594/ட்டி1/2022-1, நாள்.23.12.2022 மற்றும் அ.சா.எண்.3802705/ஜி2/2022, நாள்.04.01.2023-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
திரு. க.ஆனந்தகுமார் , இளநிலை உதவியாளர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், சென்னை-600 005.
(ஆதிதிராவிடர் நல இயக்குநர் வழியாக)

மாவட்டக் கருவூல அலுவலர், சென்னை மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-600 008,

<u>நகல்;</u>

தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-600 009.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், ஆதிதிராவிடர்
மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

13/1/2023.
பிரிவு அலுவலர்.
13/1/2023